# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2400/42 - 2024 සැප්තැම්බර් මස 06 වැනි සිකුරාදා - 2024.09.06

*2400/42 ஆம் இலக்கம் - 2024 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி III - காணிகள்

### காணி கொள்வனவு பற்றிய அறிவித்தல்கள்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: 11/3/3/1/14R.

காணி அமைச்சின் குறிப்பு இல.: LD/05/2008/MV/408-L.

ஒரு பகிரங்கத் தேவைக்கு வேண்டியதான கீழ்க்காணும் காணியை எடுத்துக்கொள்ள அரசாட்சியார் எண்ணியிருக்கிறார்கள் என்பதனை 1964 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் நான், இத்தால் அறிவிக் கின்றேன்.

**எடுத்துக்கொள்ளவிருக்கும் காணியின் விபரம் :**

இங்கு பகிரங்கத் தேவை என்பது மொரகஹகந்த மற்றும் களுகங்கை அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் களுகங்கை தெற்குகரை அபிவிருத்தி நடவடிக்கைக்கான காணி எடுத்தலாகும்.

மத்திய மாகாணத்தில் மாத்தளை மாவட்டத்தில் லக்கல பிரதேச செயலாளர் பிரிவிலே E 396 B அகரஹெடிய கிராம அலுவலர் பிரிவிலே அமைந்துள்ள நில அளவையாளர் நாயகத்தினால் 2023.03.10 ஆந் திகதி நிறைவேற்றப்பட்ட க.சீ. 310243, வலய இல. 22, பத்திர இல. 2 இல் காட்டப்பட்டுள்ள 2.8910 ஹெக்டயார் விஸ்தீரணம் கொண்ட காணித்துண்டின் விபரங்கள் :

*01.* **துண்டு இல. 1**

காணியின் பெயர்: அலியா வெட்டுனஹேன்யாய; விபரம்: வீட்டுத்தோட்டம், வீதி, நீரோடை; உரிமை கோருபவர்: அரசு; ஆரம்ப உரிமை கோருபவர்: காணிச்சீர்திருத்த ஆணைக்குழு; விஸ்தீரணம் : 2.8910 ஹெக்டயார்.

மேற்குறித்த காணிக்கு உரித்துப் பேசுகின்ற சகலரும் தாமாக அல்லது முறைப்படி எழுத்தில் அதிகாரம் அளிக்கப்பட்ட காரியக்காரர் மூலமாக 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி மு. ப. 9.00 மணிக்கு லக்கல பிரதேச செயலகத்தில் என் முன்பாக வெளிப்படுத்தும் படியும்,

மேலும் அக்காணியில் அவர்களுக்குள்ள உடந்தைகளின் தன்மையையும் குறித்த காணியை எடுத்தற்கான நஷ்ட ஈடு பற்றிய அவர்களின் கோரிக்கைகளின் விபரங்களையும், நஷ்ட ஈட்டுத் தொகையையும், அத்தொகை கணிக்கப்பட்ட விதத்தையும், 2024 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 14 ஆந் திகதிக்கு முன்னர் எழுத்தில் இரு பிரதிகளாக எனக்கு அறிவிக்கும் படியும் இத்தால் கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

சுவர்ணா பெரேரா,
பிரதேச செயலாளர்,
லக்கல.

பிரதேச செயலகம்,
லக்கல,
2024, செத்தெம்பர் 02.

EOG 09 - 0060

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

எனது இல.: KDS/UDP/4/1/02/03 .
காணி அமைச்சின் இல.: 4-3/18/2020/CEB/08.

**மொரகொல்ல விலேஜ் புதிய குடியேற்றத்திற்கான உட்பிரவேசிக்கும் பாதையை நிர்மாணிப்பதற்காக காணியை எடுத்துக்கொள்ளல்**

மேற்குறிப்பிட்ட தலைப்பின் கீழ் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 2310/08 ஆம் இலக்க 2022.12.12 ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட நஷ்டஈட்டு விசாரணைத் திகதி மற்றும் நேரம் மட்டும் 2024.10.23 ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு என திருத்தப்பட வேண்டும் என இத்தால் அறியத்தருகின்றேன்.

ஆத்மா திலுக்ஷி ஜயரத்ன,
பிரதேச செயலாளர்,
உடபலாத - கம்பொல.

பிரதேச செயலகம்,
உடபலாத - கம்பொல,
2024, ஓகத்து 26.

EOG 09 - 0061

---

திருத்தம்

**காணி எடுத்தற் சட்டம் (அத்தியாயம் 460)**

7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்

காணி எடுத்தற் (திருத்தம்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான காணி எடுத்தற் சட்டத்தின் (அத்தியாயம் 460) 7 ஆம் பிரிவின் அறிவித்தலின் கீழ் இல. 2300/11 மற்றும் 2022.10.04 ஆம் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசாங்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்ட அறிவித்தலின் படி 3ஏ பக்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ள கடத்திரல் வரைபட இல. 511860 இன் தொகுதி இல. 06, தாள் இல. 01 இன் காணிப் பகுதி துண்டு இல. 33 மற்றும் 34 இல் குறிப்பிடப்பட்டுள்ள காணிப் பகுதி அளவீடு திருத்தம் செய்யப்பட்டு க.வ. 511860, தொகுதி இல. 06, தாள் இல. 02 இன் துண்டு இல. 1, 2, 3 மற்றும் 4 ஆக பிரிக்கப்பட்டு இக் காணித்துண்டு களுக்குரிய பந்தி கீழ்வருமாறு திருத்தம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கின்றேன்.

01. **துண்டு இல. 1**
காணியின் பெயர்: மாரகஹகும்புர; விபரம்: வயல்; உரிமை கோருவோர்: ஏ.ஆர்.என். சமரதுங்க, இல. 10, ஷாந்தி வீதி, கம்பஹா (காணி எடுத்தலுக்கான இறுதிக்கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம்: 0.0634 ஹெக்டயார்.

02. **துண்டு இல. 2**
காணியின் பெயர்: - ; விபரம்: கால்வாய்; உரிமை கோருவோர்: கண்டுபிடிக்க முடியாது (காணி எடுத்தலுக்கான இறுதிக்கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம்: 0.0030 ஹெக்டயார்.

03. **துண்டு இல. 3**
காணியின் பெயர்: மீதெல்லகஹகும்புர; விபரம்: வயல்; உரிமை கோருவோர்: விக்கிரம ஆரச்சி அப்புஹாமிலாகே ஜயசிங்ஹ, இல. 55/7, மயான வீதி, கம்பஹா (காணி எடுத்தலுக்கான இறுதிக்கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம்: 0.0102 ஹெக்டயார்.

04. **துண்டு இல. 4**
காணியின் பெயர்: - ; விபரம்: கால்வாய்; உரிமை கோருவோர்: கண்டுபிடிக்க முடியாது (காணி எடுத்தலுக்கான இறுதிக்கட்ட நடவடிக்கை); விஸ்தீரணம்: 0.0028 ஹெக்டயார்.

கே.ஏ.எஸ்.எல். குணதிலக்க,
பிரதேச செயலாளர்,
கம்பஹா.

பிரதேச செயலாளர் அலுவலகம்,
கம்பஹா,
2024, ஓகத்து 28.

EOG 09 - 0062

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது.